# ஆய்வுக் களஞ்சியம்



பதிப்பாசிரியர்

செல்வி ம.காயத்ரி

# ஆய்வுக் களஞ்சியம்

(ஆய்வுக்கட்டுரைத்தொகுப்பு)

தமிழ்த்துறை

நல்லமுத்துக்கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி(தன்னாட்சி)

தேசிய மீள்தர மதிப்பீடு & மதிப்பேற்றுக் குழுவின் ‘A’ தகுதி பெற்றது

ஐ.எஸ்.ஓ. 2008-2015 தரச்சான்றிதழ் பெற்றது

90, பாலக்காட்டுச் சாலை, பொள்ளாச்சி- 642001.

பதிப்பாசிரியர்

*செல்வி ம.காயத்ரி*

# ஆய்வுக் களஞ்சியம்

பதிப்பாசிரியர் : **செல்வி ம.காயத்ரி**

பதிப்புரிமை : பதிப்பாசிரியர்

முதற்பதிப்பு : ஆகஸ்ட், 2018

வெளியீடு : தமிழ்த்துறை,
நல்லமுத்துக்கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி,
பொள்ளாச்சி.

அச்சாக்கம் : அறம் பதிப்பகம்,
ஈரோடு, அலைபேசி: 77088-21464, 85084-84583.
arampathippakam@gmail.com

**ISBN: 978-93-86770-84-4**

Editor's : Selvi M.Gayathri

Copyright's : Editor

First Edition : August- 2018

Published : Department of Tamil,
N.G.M. College, Pollachi.

Printing at : **Aram Book House,**
7A,Veerabhatra 2nd Street,
Sathy Road, Erode-3.
77088-21464, 85084-84583.
arampathippakam@gmail.com

Pages : 118+14=132

Price : 100/-

# உள்ளடக்கம்


| வ.எண் | பெயர் | தலைப்பு | ப.எண் |
|---|---|---|---|
| 1. | சி.அமுதா | - யாழ் - புதிய பார்வை | 1 |
| 2. | ச.கவிதா | - சங்ககாலக் குடும்பம் | 7 |
| 3. | எஸ்.கனகவள்ளி | - வரும் முன் காப்போம் | 13 |
| 4. | ஆ.காமாட்சியம்மாள் | - சிறுகதைகள் | 18 |
| 5. | மு.காமராஜ் | - தமிழக நிகழ்த்துக் கலைகளில் சிலம்பாட்டம் | 21 |
| 6. | ம.காயத்ரி | - திணைமரபு | 26 |
| 7. | கோமதி | - சிறுகதைகள் | 34 |
| 8. | மா.ஜெ.சசிக்குமார் | - சிலம்பக்கலைக்கு ஆதாரங்கள் | 37 |
| 9. | வே.சக்திவேலு | - ஆயிஷா இரா.நடராசன் காட்டும் வகுப்பறை | 41 |
| 10. | சு.சதீஸ்குமார் | - தனி நின்ற தத்துவத்தின் தகை மூர்த்தி | 45 |
| 11. | பா.சதீஷ் குமார் | - சைவத் திருமுறையில் செவிடு என்ற ஊனக்குறிப்பு வெளிப்படும் முறை | 53 |
| 12. | சூர்யா. ர | - விகடன் தடம் இதழில் மனுஷ்யபுத்திரன் பார்வையில் பெண்கள் | 59 |
| 13. | சு.நளினி | - அக இலக்கியங்களில் அஃறிணை உயிரினங்கள் | 65 |
| 14. | அ.நித்யா | - சங்க இலக்கியத்தில் தழை ஆடை | 69 |
| 15. | த.நர்மதா தேவி | - புறநானூற்றில் கொடைத்தன்மையும் அறக்கருத்துக்களும் | 73 |
| 16. | பா.பௌத்ரா தேவி | - புதுமைப்பித்தனின் - பொன்னகரம் - ஆய்வு | 79 |
| 17. | ப.பிரதாப் | - அறஇலக்கியங்களில் கல்விக்கோட்பாடு | 82 |

| | | |
|---|---|---|
| 18. கா.புவனேஸ்வரி | - சங்க கால உணவு முறைகள் | 86 |
| 19. அ.மகபுபூ | - சில சங்ககால ஊர்பெயர்களும் அதற்கான காரணங்களும் | 91 |
| 20. மகேஸ்வரி | - சிறுகதை இலக்கியம் | 96 |
| 21. து.விசாலாட்சி | - வா.மு.கோமுவின் சிறுகதைகள் - ஒரு பார்வை | 99 |
| 22. ஜெ. வினோதினி | - குறுந்தொகையில் செவிலி நற்றாய் நிலை | 104 |
| 23. வேணுகோபால் | - வண்ணநிலவன் சிறுகதைகள் உணர்த்தும் சமுதாயப் பதிவுகள் | 107 |
| 24. நா.ஸ்ரீ பிரியா | - நற்றிணையில் பழக்க வழக்கங்கள் | 111 |
| 25. ஷரிமளாதேவி | - காட்டுப் பூக்களின் கானங்கள் | 115 |

# யாழ் - புதியபார்வை

**சி.அமுதா,**
பகுதிநேர முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ்த்துறை,
ந.க.ம.கல்லூரி,
பொள்ளாச்சி.

---

**முன்னுரை**

தென்னாப்பிரிக்காவில் உள்ள "கேப்டவுன்" நகரம் 2018ல் தண்ணீர் முற்றிலும் தீர்ந்த நிலையை (ZERO DAY ) எட்டியுள்ளது. பருவ கால மாற்றத்தால் உலக நாடுகள் பலவற்றுக்கும் நீர்ப்பற்றாக்குறை மிகப்பெரும் சவாலாக இருந்து வருகிறது. இந்நிலையில் அமெரிக்காவில் உள்ள வெர்ஜீனியப் பல்கலைக் கழகத் தொழில் நுட்ப விஞ்ஞானிகள் "Fog Harp" எனப்படும் காற்றிலிருந்து நீர் சேகரிக்கும் தொழில் நுட்பத்தைக் கண்டறிந்துள்ளனர். இத்தொழில் நுட்பத்திற்கு ஒரு முன் மாதிரியாக தமிழர்களின் பண்டைய இசைக் கருவியான யாழ் அமைந்துள்ளது. சங்க காலமக்கள் இசைக்கருவியாக மட்டும்தான் யாழைப் பயன்படுத்தினரா? என்ற எண்ணத்தை இவ்வாய்வு ஏற்படுத்துகின்றது. யாழின் தோற்றம், வகைகள், அமைப்பு பற்றியும் நவீன தொழில்நுட்பத்தோடு பொருந்தும் முறை பற்றியும் இக்கட்டுரையில் காண்போம்.

**யாழ் தோற்றம்**

மனிதன் வேட்டைக்குப் பயன்படுத்தும் வில்லிலிருந்து வில்யாழ் எனும் நரம்புக்கருவி உருவாகி அதிலிருந்து பல்வேறு நரம்புக் கருவிகள் தோன்றியிருக்கின்றன. பழம்பெரும் நூலான தொல்காப்பியம் பறையையும் யாழினையும் மக்களின் கருப்பொருள்களாகக் கொண்டுள்ளது.


> **"தெய்வம் உணாவேமாமரம் புள்பறை**
> **செய்தியாழின் பகுதியோடுதொகைஇ**
> **அவ்வகைபிறவும் கருவெனமொழிப"**
>
> -தொல்காப்பியத்தில்

ஐவகைநிலங்களான குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலைகளின் கருப்பொருட்களைக் குறிப்பிடுமிடத்து குறிஞ்சி யாழ், பாலையாழ்,

முல்லையாழ், மருதயாழ், விளரியாழ் எனஐவகையாழ்களைக் குறிப்பிடுகிறார் தொல்காப்பியர்.

**யாழ்வகைகள்**

முதன்முதலில் யாழ்கள் நிலங்களைக் கொண்டுதான் பகுக்கப்பட்டிருந்தன. ஆனால் காலப்போக்கில் இவை இராணாசுரயாழ், கச்சபியாழ், களாவதியாழ், கின்னரியாழ், கீச்சயாழ், சகோடயாழ், சீறியாழ், செங்கோட்டியாழ், தீக்குச்சியாழ், தும்புருயாழ், நாரதயாழ், பிரகதியாழ், பேரியாழ், மகதியாழ், பெருங்கலம்,மகரயாழ், மருத்துவயாழ், முளரியாழ், வல்லகியாழ், விராளியாழ், விற்கோட்டியாழ், வில்யாழ், பரவையாழ், ஆதியாழ், தந்திரியாழ் போன்றவைகளாகும்.




இவற்றில் சீரியாழ், பேரியாழ் போன்றவை சங்க இலக்கியத்திலும், செங்கோட்டியாழ், சகோடயாழ், மகரயாழ், பேரியாழ் போன்றவை சிலப்பதிகாரத்திலும், வில்யாழ் பெரும்பாணாற்றுப் படையிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. விளரியாழ் ''யாழ்நூலில்''குறிப்பிடப்பட்டுள்ளது.

**யாழ் அமைப்பு**

“.................................குமிழின்
புழற்கோட்டுத் தொடுத்தமரற்புரிநரம்பின்
வில்யாழிசைக்கும் விரலெரிகுறிஞ்சி“

எனப் பெரும்பாணாற்றுப் படையில் குமிழில் உட்கூடாகிய கொம்பிடத் தேவளைத்துக் கட்டின மரக்கயிற்றை விரலாலே தெறித்து வாசிக்கும் நரம்பினையுடைய வில்யாழில் குறிஞ்சிப் பண்ணை வாசித்ததாகக் காணப்படுகின்றது.

கலித்தொகையில் யாழ் செய்முறையைக் குறிப்பிடும் போது,

**"எறிசுறாவான்மருப்புக் கோத்துநெறிசெய்த**
**நெய்தல் நெடுநார்ப் பிணித்துயாத்துக் கையினர்வின்**
**யாழினைக் கொண்ட இனவண் டிமிர்ந்தார்ப்ப"**

நெய்தல் நிலத்தில் சுறா மீனின் நீண்ட மருப்பை நன்குசீவி அதை வகைப்படுத்தி யாழ் செய்தனர். நெய்தல் செடியின் நீண்ட நாரை நன்கு பிணைத்து முறுக்கி அதனை யாழ் நரம்பாக்கிக் கட்டினர். நெய்தல் நிலத்தவர்.

கி.பி. 1947-ம் ஆண்டு வெளிவந்த சுவாமி விபுலானந்த அடிகளின் 'யாழ்நூல்''எனும் நூலில் யாழ் அமைப்பும் செய்முறையும் விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

**யாழின் பயன்பாடு**

**1. பாணர்கள் பொருளீட்ட**

பழந்தமிழகத்தில் பாணர்களும் பாடினிகளும் இசையை வளர்த்து வந்தனர். யாழிசைத்தலைத் தொழிலாகக் கொண்டு பல மன்னர்களையும் வள்ளல்களையும் பாடிப்பரிசுகள் பல பெற்று வாழ்ந்து வந்தனர்.

**"நரம்பின் முரலுநயம்வருமுரற்சி**
**விரலியர் வறுங்கைக் குறந்தொடிசெறிப்பப்**
**பாணருவப்பக் களிறுபலதழீஇ"**

என மதுரைக் காஞ்சியில் பாணர்கள் யாழிசைத்துப் பல களிறுகளைப் பரிசாகப் பெற்ற செய்தி இடம் பெறுகிறது. மேலும் பொருநராற்றுப்படை, சிறு பாணாற்றுப்படை, புறநானூறு, பதிற்றுப்பத்து, நற்றிணை, குறுந்தொகையிலும் பாணர் யாழிசைத்துப் பரிசு பெற்ற செய்திகள் இடம் பெறுகின்றன.

**இசை இன்பம்**

பொருளீட்ட மட்டுமன்றி இன்ப வாழ்விற்கும் பாணர்கள் யாழிசைத்துள்ளனர்.

**"நயந்தகாதலித் தழீஇப் பாணர்**
**நயம்படுமுயற்கையின் யாத்தபயன்றெரிந்**
**தின்புறுபுணர்ச்சிநுகரும்"**

**(ஐங்குறுநூறு)**

இறைவனை வழிபடவும், மக்களை மகிழ்விக்கவும் பாணர்கள் யாழிசைத்துப் பாடியுள்ளனர். யாழினை நற்காரியத்திற்கே பயன்படுத்தினர். துன்பத்திற்கு யாழிசைக்க மாட்டார்கள் என்ற செய்தியைப் புறநானூறு சுட்டுகிறது

**பயணக் களைப்புதீர பாலைநிலத்தில் யாழ்**

கடும் பாலை நிலங்களின் வழியே பயணிக்கும் போது பாணர்கள் தம் பயணக் களைப்பு தீர யாழிசைத்த செய்தியினை நற்றிணையில்,

**"கானம் வெம்பியவறம்கூர் கடத்திடை**
**வேனில் ஆதிநிறம் பெயர்முதுபோத்து**
**பாண்யாழ் கடைய"(நற் - 186)**


என்ற பாடல் மூலம் அறியமுடிகிறது.

**"சுரம்செல் கோடியர் கதுமென இசைக்கும்**
**நரம்பொடுகொள்ளும்" (நற் -212)**

என்ற பாடல் வரிகள் மூலம் கடும் பாலை நிலங்களில் பயணிக்கும் போது பாணர்கள் யாழ் வாசித்தமை புலப்படுகிறது.

**நவீனஆய்வு**

**ஈரப்பதத்தை நீராக்கும் தொழில்நுட்பம்**



வறண்ட பாலை நிலங்களில் காற்றில் இருக்கும் ஈரப்பதத்தை நீராக்கும் சில தொழில் நுட்பங்கள் பல ஆண்டுகளாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

நுண்ணிய கம்பி வலையை ஒரு சட்டத்தில் மாட்டி காற்றில் வைத்து விடுவது அதில் ஒன்று. காற்று அந்தவலையின் வழியே செல்லும் போது காற்றின் ஈரப்பதம் நெருக்கமான கம்பிகளில் சிறுகச் சிறுக சேர்ந்து நீர்த்தி வலைகளாக மாறும். நீர்த்திவலை பெரிதாகும் போது புவியீர்ப்பு விசை கீழ் நோக்கி இழுக்கதிவலைகள் திரண்டு உருண்டு கீழே உள்ள நீர்க் கலனில் சேகரிக்கப்படும்.

இந்த எளியதொழில் நுட்பத்தில் ஒரு சிறுமாற்றத்தைச் செய்தால் இன்னும் சிறப்பாகநீரைச் சேகரிக்கமுடியும் எனக்கண்டறிந்துஉள்ளனர்.

## காற்றிலிருந்துநீர் எடுக்கும் யாழ்:(Fog Harp)





அமெரிக்காவில் உள்ளவர் ஜீனியா தொழில் நுட்ப நிலையத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் கலிபோர்னியா கடற்கரைப் பகுதியில் காற்றின் ஈரப்பதத்தை உறிஞ்சி வாழும் செகோயா மரங்களைப் பார்த்து இக்கண்டுபிடிப்பை உருவாக்கி உள்ளனர். கம்பிவலையில் குறுக்கும் நெடுக்குமாக இருக்கும் கம்பிகளில் குறுக்கு கம்பிகளை நீக்கி, நெடுக்கு கம்பிகளை நெருக்கமாகத் திருத்தி அமைத்த போது நீர்த்தி வலைகள் தடையின்றி வேகமாக ஓடிசேகரமானது.

இந்த புதியமுறை “யாழ்” எனப்படும் பண்டைய இசைக் கருவியைப் போல இருக்கிறது எனவும் ஆய்வகத்தில் யாழ் கம்பிசட்டத்தை வைத்து சோதித்ததில் நீர் கூடுதலாக விரைவாக காற்றிலிருந்து சேகரிக்க முடிந்ததாகவும் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

விரைவில் பாலை நிலப் பகுதிகளில் இந்த தொழில் நுட்பத்தை சோதிக்க இருப்பதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (தினமலர் யு.சி.நியூஸ் ஏப்ரல் - 5 2018)

## முடிவுரை

இசைக்காகவும், இறைவனுக்காகவும், தொழிலுக்காகவும் மட்டுமின்றி அன்றைய சூழலில் பாலை நிலங்களில் நீராதாரத்திற்காகவும் யாழைப் பயன்படுத்தி இருக்கலாம் என்ற எண்ணத்தை மேற்கண்ட ஆய்வு ஏற்படுத்துகிறது. **"Fog Harp"** எனப்படும் காற்றிலிருந்து நீர் எடுக்கும் இம்முறையின் மூலம் பாலை வன நிலங்கள் தூய நீரைப் பெறமுடியும். நூற்றாண்டுகள் பல கடந்தும் உலக சமுதாயத்திற்கு நன்மை அளிக்கும் ஒரு கண்டு பிடிப்பிற்கு யாழ் முன் மாதிரியாகத் திகழ்வது தமிழர்களாகிய நாம் பெருமை கொள்ள வேண்டிய செய்தியாகும். யாழ் வடிவமைப்பின் சிறப்பு பற்றி மேலும் பல ஆய்வுகள் தமிழில் மேற்கொள்ளப்படவேண்டும் என்பதே இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.

**குறிப்புதவி நூல்கள்:**

1. சங்கஇலக்கியம்
2. யாழின் பரிணாமவளர்ச்சி– அ.ஸ்ரீவித்யா–முத்தமிழ் பதிப்பகம் சென்னை.
3. விக்கிபீடியா.

❖